# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண்.4/2013

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு. ராஜா முகமது, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2022 ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 21.09.2022**

**பெயர் - நந்தினி**

**க/பெ - ரஜேந்திரன்**

**வயது - 54**

**சாட்சி - PW1**

**ஊர் - சோழவரம்**

**தொழில் - இல்லத்தரசி**

**விசாரணை தொடங்கும் நேரம்- 11.42 a.m.**

**முதல் விசாரணை -**

1. நான் இவ்வழக்கின் 9ம்வாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமான பத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

(1). 29.04.1956 தேதியிட்ட கிரைய பத்திரம் ஆவண எண் 879/1956 பதிவு அலுவலகம் சார் பதிவாளர் பொன்னேரி சான்றிட்ட நகல் **(வாசா ஆ 1)** ஆகவும், **(மேற்படி ஆவணம் சான்றிட்ட நகலாக தாக்கல் செய்யப்பட்டதற்கும் அசல் ஆவணம் குறியீடு செய்யாமல் இருப்பதற்கும் காரணம் தெரிவிக்காமல் இருப்பதற்கும் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)**

(2). 06.04.2010 தேதியிட்ட செட்டில் மெண்ட் பத்திரம் ஆவண எண் 2367/ 2010 பதிவு அலுவலகம் சார் பதிவாளர் பொன்னேரி சான்றிட்ட நகல் **(வாசா ஆ 2)** ஆகவும்,

(3). 26.04.2012 தேதியிட்ட வாதிகள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அதற்கான பதிவு அஞ்சல் ரசீதுகள் 8 எண்ணிக்கைகள் **(வாசா ஆ 3)** **(வரிசை 1 முதல் 9 வரை)** ஆகவும்,

(4). மேற்படி அறிவிப்பினை பிரதிவாதிகள் 1 முதல் 5 மற்றும் 8 மற்றும் 9ம் பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டமைக்கான அஞ்சல ஒப்புகை அட்டையின் அசல் 7 எண்ணிக்கை **(வாசா ஆ 4)** **(வரிசை 1 முதல் 7 வரையிலானது)** ஆகவும்,

(5). மேற்படி அறிவிப்பு 6 மற்றும் 7ம் பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்டது. திரும்ப பெற்றமைக்கான அஞ்சல உரையின் அசல் 2 எண்ணிக்கை **(வாசா ஆ 5)** **(வரிசை 1 முதல் 2 வரையிலானது)** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**(குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளுக்கு இனங்க ஒத்திவைக்கப்படுகிறது)**

**விசாரணை முடியும் நேரம்- 11.57 a.m.**